02.02.2026 O.S. 234/2018 வா.சா 1 பத்மா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

நான் ஏற்கனவே பிரதிவாதிகளுக்கு எதிராக கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு நிலுவையில் இருந்தபோது வழக்குரையில் உள்ள பரிகாரத்தை திருத்தம் செய்ய கோரி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.அதன்படி மாற்றுபரிகரமான வழக்கு சொத்தில் கிரைய முன்தொகை ரூ.5 லட்சத்தை செலுத்த உத்தரவிடலாம் என பரிகாரம் கோரியுள்ளேன். அதன்படி நான் கோரிய ஏற்றுதை ஆற்றுதல் கிடைக்கதக்கது அல்ல என முடிவு செய்யும் பட்சத்தில் பிரதிவாதிகள் கிரைய முன்தொகை ரூபாய்.5,00,000/-த்தை வட்டியுடன் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

கிரைய ஒப்பந்தத்தை எழுதி கொடுத்த மகாலட்சுமி எனது தாயார் ஆவார். எனது தாயார் தனிப்பட்ட முறையில் கையெழுத்து செய்துள்ளார் என்றும், அதிகார முகவர் என்ற நிலையில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் எனது தாயாரின் கையெழுத்துக்கு கீழ் அதிகார முகவர் என சொல்லப்படாததால் அந்த கிரைய ஒப்பந்தம் செல்லாது என்றால் சரியல்ல. நான் பனகுடியில் வசித்து வருகிறேன். முத்திரை தாள் செல்லப்பா என்ற பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் தனது தகப்பனார் ஆவார். வா.சா.ஆ 1 கிரைய ஒப்பந்தமானது சரியாக வரிசையில் கொடுக்கப்பட்ட முத்திரை தாள் இல்லை என்றும், முன்தேதியிட்டது என்றும், மோசடியானது என்றால் சரியல்ல. முத்திரை தாள் விற்பனையாளரை நீதிமன்றத்தில் விசாரிக்க

உள்ளேனா என்றால் விசாரிக்க உள்ளேன். கிரைய ஒப்பந்த சொத்தானது ஆதியில் அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு இடம் என்றால் சரிதான். அந்த புறம்போக்கு நிலத்தை நிலமற்ற ஏழை எளியோருக்கு ஆதிதிராவிட தாசில்தார் கொடுத்தார் என்றால் சரிதான். சுப்பையா மகன் கிருஷ்ணன் என்பவர் பட்டியலின சமுகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவ்வாறு கொடுத்த ஒப்படைவில் வருவாய் கோட்டாட்சியரின் முன் அனுமதி இல்லாமல் யாரும் விற்பனை செய்யகூடாது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு விற்பனை செய்யகூடாத சொத்தை கிரைய ஒப்பந்தம் மூலம் பெற்றிருப்பது ஏற்கதக்கது அல்ல என்றும், கிரைய ஒப்பந்தம் செல்லாது என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்த தொகையாக ரூ.5 லட்சம் கொடுத்துள்ளேன். ரூ.5 லட்சத்தை வா.சா.ஆ 1 ன் அடிப்படையில் தான் கொடுத்தேன். ரூ.5 லட்சத்தை என் தாயாரிடம் தான் கொடுத்தேன். அவ்வாறு என் தாயார் கிருஷ்ணனிடம் பணத்தை கொடுத்தற்கு ரசீது உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் ரசீதை பார்த்து இல்லை. 11.08.2017 ம் தேதியில் ரூ.5 லட்சத்தை என் தாயாரிடம் கொடுத்ததாக கூறுவதற்கு வா.சா.ஆ 1 ஐ தவிர்த்து வேறு ஆவணம் ஏதேனும், என்னிடம் பணம் இருந்தற்கு வேறு ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் இல்லை. கையில் சேர்த்து வைத்திருந்த பணத்தை தான் கொடுத்தேன். வா.சா.ஆ 1 எழுதியதாக கூறும் காலத்தில் கிருஷ்ணனுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 80 வயது இருக்கும். கிருஷ்ணன் என் அம்மாவிற்கு தாய்மாமா ஆவார். எனக்கு தாத்தா முறையாவார். கிருஷ்ணனை எனது தாயார் தான் உணவு கொடுத்து கடைசி காலத்தில் பராமரித்து வந்தார் என்றால் சரிதான்.

அதிகார ஆவணத்தில் கிருஷ்ணனின் மகன்கள் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த விபரம் அவர்களுக்கு தெரியும். கிருஷ்ணனை எனது தாயார் பராமரித்து வந்து நிலையில் மோசடியாக அதிகார ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணத்தின் அடிப்படையில் அதனை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற் குமுன்பாக வருவாய் துறையில் கோட்டாட்சியரிடம் முறையாக அனுமதி பெற வேண்டும் என்ற விதி உள்ள நிலையில் சார்பதிவாளரை ஏமாற்றி பதிவு செய்யப்பட ஆவணம் என்றால் சரியல்ல. கிருஷ்ணனின் பிள்ளைகள் மற்றும் பேரன் ஆகியோர்கள் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த வீடானது மட்ப்பா போட்டப்பட்ட பெரிய வீடு என்றால் சரியல்ல. ஒட்டு கூரை வீடாகும். பிரதிவாதிகள் அதனை திருத்தி கட்டி கான்கீரிட் வீடாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள வீடு மட்டுமே ரூ.5 லட்சம் பெறும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் அடிமனை நிலம் பாவூர்சத்திரத்தில் இருந்து கடையம் செல்லும் ரோட்டில் உள்ளது என்றால் சரியல்ல. கற்குடி கிராமத்தில் உள்ளது. தெருவுக்கு வடக்குபக்கமாக வீடு உள்ளது. இடத்தின் மதிப்பு என்னவென்றால் 2017 ம் ஆண்டு 5 லட்சம் என கூறியதால் பணம் கொடுத்தேன். கிரைய ஒப்பந்தத்திற்கு முன்னர் வில்லங்கம் எடுத்து பார்த்தேனா என்றால் நம்பிக்கையின் பேரில் வில்லங்கம் எடுத்து பார்க்கவில்லை. கோட்டாட்சியரின் முன் அனுமதி பெற வேண்டிய நிலையில் வழக்கறிஞர் மூலம் ஆலோசனை பெற்று கிரைய ஒப்பந்தம் செய்தேனா என்றால் இல்லை. கிருஷ்ணன் இறந்தபிறகு முன் தேதியிட்டு வழக்கு சொத்தில் ஆதாயம் பெற வேண்டும்

என்ற நோக்கத்தில் வா.சா.ஆ1 கிரைய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும், எனது தாயாரும் சேர்ந்து வா.சா.ஆ1 கிரைய ஒப்பந்தத்தை மோசடியாக உற்பத்திசெய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1ல் கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து செய்திருப்பவர்கள் எனது உறவினர்கள் என்றால் என் அப்பா மற்றும் ஒரு இஸ்லாமியர் கையெழுத்து செய்துள்ளார்கள். நான் வழக்கில் கோரியுள்ள எந்த ஒரு தீர்வும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.